# அரசினர் பாடசாலை
# பெற்றோருக்கான தகவல்கள்

*Die Volksschule – Elterninformation*
*Tamilisch*

Kanton Luzern
Dienststelle Volksschulbildung
volksschulbildung.lu.ch

## லுட்சேர்ண் மாநிலத்தின் அரசினர் பாடசாலை – அனைவரையும் ஊக்குவித்தல்

அனைத்து பிள்ளைகளும் இளைஞர்களும் இலவசமாக பொதுசன அரசினர் பாடசாலைகளுக்கு சமூகமளிக்க முடியும். அவர்களது எதிர்கால தொழில் வாழ்க்கையில் அவர்களுக்கு சம சந்தர்ப்பம் கிடைக்கும். அரசினர் பாடசாலைக்காலம் சாதாரணமாக 10 தொடக்கம் 11 வருடங்கள் ஆகும். பாடசாலைக்குச் சமூகமளிப்பது கட்டாயமானது, பாடசாலை உபகரணங்கள் இலவசமானவை. பெற்றோருடனான நல்ல இணைந்த வேலைக்கு, பாடசாலை பெருமதிப்பளிக்கின்றது.

## 1. கட்டமைப்பு

| பாலர்வகுப்பு | கீழ்ப்பிரிவுப்பாடசாலை | மேற்பிரிவுப்பாடசாலை |
|---|---|---|
| பாலர்வகுப்பு<br>2 வருடங்கள்<br>1 வருடம் கட்டாயம் செல்ல வேண்டும் | கீழ்ப்பிரிவுப்பாடசாலை<br>6 வருடங்கள் | மேற்பிரிவுப்பாடசாலை<br>3 வருடங்கள்<br>தரம் A<br>தரம் B<br>தரம் C |
| ஆரம்பவகுப்பு<br>3 – 5 வயது | | |

**பாடசாலைப்பிரவேசம்**

**வயதும் கோரிக்கைகளும்**

நவம்பர் மாதம் 1. ஆம் திகதிக்கு முன் 5 வயதைப் பூர்த்தி செய்த பிள்ளைகள், கட்டாயமாக பாலர்வகுப்புக்கு அல்லது ஆரம்பவகுப்புக்குச் செல்ல வேண்டும்.

>பெற்றோர் வயது குறைந்த பிள்ளைகளை அனுப்ப முடியும், அவர்கள் குறிக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றும் பட்சத்தில்: பாடசாலைக்குத் தனியாகச் செல்லுதல், பாடசாலை நேரங்களைக் கடைப்பிடித்தல் அத்துடன் தமது உடைகளைத் தாமே அணிய முடியுமாயின்

>ஒரு பிள்ளை பாடசாலைக்குச் செல்வதற்கான முதிர்ச்சி பெற்றிருக்காவிடின், பெற்றோர் பாடசாலைத் தலைமைப்பீடத்துடன் கலந்து பேசி, ஆகக் கூடியது ஒரு வருடம் பாடசாலைப்பிரவேசத்தைப் பின் போடலாம்.

**பாலர்வகுப்பு அல்லது ஆரம்பவகுப்பு**

உள்ளூராட்சி சபைகள் இரண்டு வருட பாலர்வகுப்பை அல்லது ஓர் ஆரம்பவகுப்பை நடாத்துகின்றன. ஆரம்பவகுப்பு, இரண்டு வருட பாலர் வகுப்பையும் முதல் இரண்டு வருட கீழ்ப்பிரிவுப் பாடசாலை வருடங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த வகுப்புகளில் வெவ்வேறுபட்ட வயதுப் பிரிவினர் ஒன்றாக இருப்பார்கள். அதாவது வயது குறைந்தவர்களும் வயது கூடியவர்களும் ஒரே வகுப்பில் இருப்பதுடன், இந்த நான்கு வருடங்களும் ஒரே ஆசிரியர்களிடமே கல்வி கற்பார்கள். இலகுவாக கற்கக் கூடிய பிள்ளைகள் மூன்று வருடங்களில் இந்த வகுப்பைக் கற்று முடிக்கலாம். கற்பதற்கு மேலதிக நேரம் தேவைப்படும் பிள்ளைகள், ஐந்து வருடங்கள் ஆரம்ப வகுப்பில் இருக்கலாம்.

**கற்பித்தல் நேரம்**

பாலர்வகுப்புக்கும் ஆரம்பவகுப்புக்கும் குறிக்கப்பட்ட தொகுதி நேரங்களாக, ஐந்து முற்பகல்களில், உதாரணமாக 8 முதல் 11.30 மணி வரை கற்பித்தல் நடைபெறும், இந்த நேரத்துக்கிடையில் 30 நிமிட இடைவேளை விடப்படும்.

**கீழ்ப்பிரிவுப்பாடசாலைக்கு செல்தல்**

பெற்றோரும் வகுப்பு ஆசிரியரும்/ஆசிரியையும் இணைந்து பாலர்வகுப்பிலிருந்து அல்லது ஆரம்பவகுப்பிலிருந்து கீழ்ப்பிரிவுப்பாடசாலைக்கு போவது பற்றி தீர்மானிப்பர்.

**கீழ்ப்பிரிவுப்பாடசாலை**

கீழ்ப்பிரிவுப்பாடசாலை 6 வருடங்கள் நடைபெறும். பிள்ளைகள், பாலர்வகுப்பின் பின் 1 ஆம் வகுப்புக்குச் செல்வர், ஆரம்பவகுப்புக்குப் பின் 3 ஆம் வகுப்புக்குச் செல்வர். 5 முற்பகல்களில் கற்பித்தல் தொகுதிநேரமாக (Blockzeiten) இடம்பெறும். 5 ஆம் வகுப்பில் மேற்பிரிவு I க்கு வகுப்பேற்றப்படுவதற்கான செயல்முறை ஆரம்பிக்கும். இந்த வகுப்பேற்றத்துக்கான செயல்முறை ஆரம்பிப்பதற்கு முன், ஆசிரியையால்/ஆசிரியரால் பெற்றோருக்கு தகவல் தெரிவிக்கப்படும்.

**வகுப்பேற்ற செயல்முறை**

வகுப்பேற்ற செயல்முறையில் ஒரு தேர்வு இடம்பெறும். பிள்ளையின் ஆற்றலுக்கிணங்க ஆசிரியையும்/ஆசிரியரும் பெற்றோரும் 6 ஆம் வகுப்பின் பின், பிள்ளை எந்த பாடசாலைக்குச் செல்வதென தேர்வு செய்வர். அது மேற்பிரிவுப்பாடசாலையில் தரம் A இல் இருந்து தரம் C வரையும் அல்லது நீண்டகால உயர்தரவகுப்பாக (Langzeitgymnasium) இருக்கலாம்.

**மேற்பிரிவுப்பாடசாலை**

மேற்பிரிவுப்பாடசாலை 3 வருடங்கள் நடைபெறும். வகுப்பேற்ற செயல்முறையுடன் பிள்ளை திறமையின் தரத்துக்கேற்ப பிரிக்கப்படும்:

- தரம் A, உயர்தர கோரிக்கைகள்
- தரம் B, பரந்துபட்ட கோரிக்கைகள்
- தரம் C, அடிப்படையான கோரிக்கைகள் புள்ளிகளின்

அடிப்படையில் பிள்ளை தரத்தை மாற்றிக்கொள்ளலாம்.

மேற்பிரிவுப்பாடசாலையில் இளைஞர்கள் தமது தொழில் வாய்ப்புக்களை அறிந்து கொள்ளலாம். தொழிற்றேர்வின் போது அவர்களுக்கு ஆதரவு கிடைக்கும். அவர்கள் ஒரு தொழிற்கல்விக்கு (Berufslehre), ஒரு தொழில் துறைசார் பாடசாலைக்கு (Fachmittelschule) அல்லது குறுங்கால உயர்தராதரப்பாடசாலைக்கு (Kurzzeitgymnasium) பிரவேசிப்பர்.

## 2. மதிப்பீடு

**பாலர்வகுப்பு ஆரம்பவகுப்பு, 1./2. வகுப்புகள்**

„முற்று முழுதான மதிப்பீடும் ஊக்குவிப்பும்“ (GBF) என்னும் கோட்பாட்டுக்கிணங்க, பிள்ளைகள் மதிப்பீடு செய்யப்படுவார்கள். இக் கலந்துரையாடல்கள், கட்டாயம் கலந்து கொள்ள வேண்டிய கடமைப்பாடுடைய மதிப்பீட்டுக்கலந்துரையாடல்களாகும். இக் கலந்துரையாடலின் போது, ஆசிரியர்/ஆசிரியை, பெற்றோர் (தாயும் தந்தையும்) பிள்ளை ஆகியோர் பங்கு கொள்வர்.

**3. – 9. வகுப் புகள்**

3 ஆம் வகுப்பிலிருந்து புள்ளிகள் வழங்கப்படும். ஆசிரியர், பெற்றோர், பிள்ளைக்கிடையிலான கலந்துரையாடல் முன்போலவே, குறைந்தது ஒரு வருடத்துக்கு ஒரு முறையாவது இடம் பெறும்.

## 3. ஊக்குவிப்பு வாய்ப்புகள்

**ஒன்றிணைக்கப்பட்ட ஊக்குவிப்பு வாய்ப்புகள்**

ஒன்றிணைக்கப்பட்ட ஊக்குவிப்பு முழு வகுப்புக்குமானது. சில வேளைகளில் பிள்ளைகளுக்கு அல்லது இளைஞருக்கு குறிப்பிடப்படக்கூடிய தேவைகளிருக்கும். அப்போது அவர்களுக்கு பிரத்தியேகமான ஆதரவு வழங்கப்படும். அவர்களுக்கு கீழ்க்காணும் சந்தர்ப்பங்களில் ஊக்குவிப்பு உண்டு:

- கற்றல் பிரச்சினைகளும் பகுதிவாரியான ஆற்றல் பலவீனமும்
- குறிப்பிடக்கூடிய திறமைகள்
- பிறமொழியைப் பின் புலமாகக் கொண்டவர்கள்
- நடத்தைப் பிரச்சினைகள்

வகுப்புக்குள்ளேயே ஊக்குவிப்பு நடைபெறுவதனால், அது ஒன்றிணைக்கப்பட்ட ஊக்குவிப்பு (IF) என்றழைக்கப்படுகின்றது.

„ஒன்றிணைக்கப்பட்ட ஊக்குவிப்பு" க்கான பெற்றோருக்கான தகவல்கள், பல மொழிகளில் உண்டு:

*www.volksschulbildung.lu.ch/if_eltern*

இரண்டாவது மொழியாக டொய்ச் **(DaZ)**

DaZ இது இரண்டாவது மொழியாக டொய்ச் என்பதன் சுருக்கம். பிள்ளைகளும் இளைஞரும் இன்னும் நன்றாக டொய்ச்சை அறிந்திருக்காது விடின், அவர்களுக்கு இந்த DaZ பாடம் கற்கும் வாய்ப்பு கிடைக்கும். DaZ – கற்பித்தலானது, தனியாக அல்லது குழுவாக அல்லது ஒன்றிணைக்கப்பட்ட ஊக்குவிப்பாக வகுப்புக்குள்ளேயே இடம் பெறலாம். பாடசாலைத் தலைமைப்பீடம் பிள்ளைகளை யார் எதற்கென பிரித்து விடும்.

**பாடசாலைச்சேவைகள்**

பிள்ளைகளுக்கும் இளைஞருக்கும் பெற்றோருக்கும் அவர்களுக்குப் பிரச்சினைகள் இருக்கும் பட்சத்தில், பாடசாலைச்சேவைகள் உதவி புரிகின்றன. இந்த உதவி இலவசமானது.

பொறுப்பான பிரிவுகள்:

- பாடசாலை உளவியல் சேவை: கற்றல் - நடத்தை பிரச்சினைகள் இருக்கும் பட்சத்தில்
- பேச்சுப்பயிற்சி சேவை: மொழியிலும் மொழித்தடங்கலின் போதும்
- உளவியலியக்க பயிற்சி மையம்: நுண்ணிய – பலமான இயக்கங்களில் வித்தியாசங்கள் இருந்தால்
- பாடசாலை சமூக பணி: சமூக, பிள்ளைவளர்ப்பு சம்பந்தமான கேள்விகளின் போது ஆலோசனைக்கு

சில பாடசாலைச்சேவைகளுக்கான பெற்றோருக்கான தகவல்கள், பல மொழிகளில் உண்டு:

*www.volksschulbildung.lu.ch/schuldienste_eltern*

**பிரத்தியேகப்பாடசாலை**

ஒரு மனவளர்ச்சி குறைவால், உடல் ஊனத்தால், மொழியால், ஒரு கேட்டல்,- பார்வை- அல்லது நடத்தைக்குறைபாட்டால் பிரத்தியேகப் பாடசாலை தேவைப்படும் பிள்ளைகளுக்கும் இளைஞர், யுவதிகளுக்குமுரியது. இச் சந்தர்ப்பங்களில் அவர்கள் கீழ்க்காணும் துறைசார் நிபுணர்களால் பரிசோதிக்கப்படுவர்:

- பாடசாலை உளவியல் சேவை

  அல்லது

- அரசினர் பாடசாலைச் சேவைகளின் பிரத்தியேகப்பாடசாலைக்கான விளக்கங்களுக்கான துறைசார்நிபுணத்துவ சேவை

  துறைசார் நிபுணர்களின் பார்வைக்கு பிரத்தியேக பாடசாலை தேவையென கருதப்பட்டால், இந்தப் பிள்ளைகளுக்கும் இளைஞர், யுவதிகளுக்கும் சாதாரண பாடசாலைக்குள்ளேயே இணைக்கப்பட்ட ஊக்குவிப்பு அளிக்கப்படும் அல்லது பிரத்தியேக பாடசாலைக்கு அனுப்பப்படுவர். அரசினர் பாடசாலைச் சேவைகள் பணியகமே பிரத்தியேகப் பாடசாலை பற்றி முடிவெடுக்கும்.

## 4. சுய விருப்பத்துக்கான வாய்ப்புகள்

**தாய் மொழிக்கும் கலாச்சாரத்துக்குமான வகுப்புகள் (HSK)**

இந்த தாய் மொழிக்கும் கலாச்சாரத்துக்குமான வகுப்புகள் (HSK) இரண்டு அல்லது பல மொழிகள் பேசுகின்ற பிள்ளைகளுக்கும் இளைஞருக்குமானவை. நோக்கங்களாவன:

- தாய்மொழியிலான ஆற்றல்களை விரிவுபடுத்தல்
- தாய் நாட்டுக் கலாச்சாரத்தைத் தெரிந்து கொள்ளல், உதாரணமாக சரித்திரம், புவியியல், பண்டிகைகள், சங்கீதம், பாரம்பரியம்

இந்த HSK வகுப்புகள் தூதுவராலயத்தால் அல்லது தனிப்பட்டவர்களின் பங்களிப்புடன் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்படுகின்றன. இந்த வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் நேரடியாக அந்த மொழிகளுக்கான HSK க்குப் பொறுப்பானவர்களிடம் செய்யப்பட வேண்டும். இந்த வகுப்புகள் சுய விருப்பத்துக்குரியவை.
HSK சம்பந்தமான பெற்றோர் தகவல்களும் அதே போல் விண்ணப்பப்படிவங்களும் இணையத்தளத்திலுள்ளன:

*www.volksschulbildung.lu.ch_HSK*

**பராமரிப்பு**

பாடசாலைகள், பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களிலும் வெவ்வேறுபட்ட பராமரிப்பு வாய்ப்புக்களை வழங்குகின்றன. பெற்றோர் இதனை விரும்பினால், பிள்ளைகள் கற்பித்தல் நேரத்துடன் காலை 7 மணியிலிருந்து மதிய இடைவேளையுடன் பின்பு பிற்பகல் 18 மணிவரை பாடசாலையில் பராமரிக்கப்படுவர். பெற்றோர் அவர்களது வருமானத்தைப் பொறுத்து அதற்காக கட்டணம் செலுத்த வேண்டும். கிட்டிய தகவல்களைப் பாடசாலைத்தலைமைப்பீடம் தரும்.

**சங்கீதப்பாடசாலைகள்**

உள்ளூராட்சி சபைகள் கீழ்வரும் வாய்ப்புக்களுடன் ஒரு சங்கீதப்பாடசாலையை நடாத்துகின்றன:

- சங்கீதமும் உடலசைவும் (அடிப்படை சங்கீதப்பாடசாலை)
- வாத்தியக்கருவிகளும் வாய்ப்பாட்டுக் கற்பித்தலும்
- மெல்லிசையும் குழு இசையும்

சங்கீதப்பாடசாலைக்கு பெற்றோர் கட்டணம் செலுத்த வேண்டும். உள்ளூராட்சிச்சபைகளிலுள்ள சங்கீதப்பாடசாலைத் தலைமைப்பீடத்துக்கு விண்ணப்பம் செய்யப்பட வேண்டும்.

## 5. விடுமுறைகள்

**பாடசாலை விடுமுறைகள்**

ஒவ்வொரு கல்வியாண்டிலும் மாணவ மாணவிகளுக்கு 14 வாரங்கள் விடுமுறை உண்டு.

- இலையுதிர்காலம்: இரண்டு அல்லது மூன்று வாரங்கள்
- நத்தார் காலம்: இரண்டு வாரங்கள்
- பஸ்னாக்ற் காலம்: ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு வாரங்கள் அல்லது பிரிக்கப்பட்டு ஒரு வாரம் பஸ்னாக்ற் விடுமுறை வாரமாகவும் ஒரு வாரம் விளையாட்டு விடுமுறை வாரமாகவும் கொடுக்கப்படும்.
- இலைதுளிர்கால விடுமுறைகள்: இரண்டு வாரங்கள்
- கோடைகாலம்: ஐந்து அல்லது ஆறு வாரங்கள்

சரியான திகதிகளை உள்ளூராட்சி சபைகள் தீர்மானிக்கும். உள்ளூராட்சி சபைகளின் விடுமுறை அட்டவணையை இந்த இணையப்பக்கத்தில் காணலாம்: *www.volksschulbildung.lu.ch/schulferien_eltern*

**விடுமுறை நாட்கள்**

இரண்டு விடுமுறை நாட்களான „பரலோகத்துக்கு எழுந்தருளும்"

(Auffahrt)நாளுக்கும் „நற்கருணைத்திருநாளுக்கும் (Fronleichnam) அடுத்து வரும் நாளில் பாடசாலை நடைபெறமாட்டாது.

**விடுமுறை கோருதல்**

பாடசாலை விடுமுறை நாட்களும் பொதுவிடுமுறை நாட்களும் தவிர்ந்த ஏனைய நாட்களில் விடுமுறை தேவைப்பட்டால், பெற்றோர் விண்ணப்பிக்க வேண்டும்: மூன்று நாட்கள் வரையில் வகுப்பாசிரியரிடமும், மூன்றுக்கு மேற்பட்ட நாட்களுக்கு பாடசாலைத்தலைமைப்பீடத்துக்கும் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

## 6. பெற்றோரின் உரிமைகளும் கடமைகளும்

பொதுசன பாடசாலைகளில் அரசினர் பாடசாலைக் கற்பித்தல் இலவசமானது. அனைத்து பிள்ளைகளும் இளைஞரும் பாடசாலைக்குச் செல்வது கட்டாயமானது. பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதற்கு பெற்றோர் பொறுப்பாவர். பிள்ளைகள் ஓய்வெடுத்து, பராமரிக்கப்பட்டு பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கு அவர்கள் பொறுப்பு. அவர்கள் வகுப்பாசிரியருடனும் பாடசாலைத் தலைமைப்பீடத்துடனும் ஒத்துழைத்து வேலை செய்வர்.

**மதிப்பீட்டுக் கலந்துரையாடல்**

வருடத்தில் குறைந்தது ஒரு முறையாவது வகுப்பாசிரியர்/வகுப்பாசிரியை பெற்றோரையும் பிள்ளையையும் மதிப்பீட்டுக்கலந்துரையாடலுக்கு அழைப்பார். வகுப்பாசிரியர்/வகுப்பாசிரியை பிள்ளையின் ஆற்றல்கள் பற்றி விளக்குவார். பிள்ளை தனது வேலை பற்றியும் பெற்றோர் தமது கண்காணிப்பையும் எடுத்துரைப்பார்கள். மதிப்பீட்டுக்கலந்துரையாடலுக்குச் சமூகமளிப்பது கட்டாயமானது.

**பாடசாலை நிகழ்வுகள்**

கல்விச் சுற்றுலாக்கள், பாடசாலைப் பயணங்கள், விளையாட்டு நாட்கள், வகுப்பு முகாம், செயற்றிட்ட வாரங்கள் போன்றன கட்டாயமான பாடசாலை நிகழ்வுகளாகும். வகுப்பாசிரியரால்/வகுப்பாசிரியையினால் பெற்றோருக்கு நேர காலத்துக்கு தகவல் தெரிவிக்கப்படும்.

**வீட்டுப்பாட வேலை**

தம்மால் தனியாகவே செய்யக் கூடிய வீட்டுப்பாட வேலைகள் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும். பெற்றோர் பிள்ளைகளின் வீட்டுப்பாட வேலைகளில் ஆர்வம் காட்டுவது பிள்ளைகளுக்கு உதவியாக இருப்பதுடன், பிள்ளைகள் எதைக் கற்கின்றார்கள் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளவும் முடியும். பாடசாலையின் பின், பிள்ளை பராமரிப்பு வாய்ப்புகளில் பங்குபற்றுவதாக இருந்தால், வீட்டுப்பாட வேலை செய்வதற்கான ஆதரவையும் பெறுவார்கள்.

**பாடசாலை வழி**

வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்லும் வரையிலான தூரம் பாடசாலை வழியாகும். இதனைக் கண்காணிக்கும் பொறுப்பு பெற்றோருடையது. பிள்ளை எவ்வாறு பாடசாலைக்கு போகின்றது என்பதையும் பெற்றோரே திர்மானிப்பர்: நடந்து செல்தல், துவிச்சக்கரவண்டியில் செல்தல், பேருந்தில் செல்தல். அதேபோல் பாடசாலைக்கற்பித்தல் தவிர்ந்த சுயவிருப்பத்துக்கிணங்கச் செல்லுகின்ற வாய்ப்புகளுக்குச் செல்லும் வழிக்கும் பெற்றோரே பொறுப்பு.

**சமயக் கல்வி**

அரசினர் பாடசாலைக்கல்வி மதச் சார்பற்றது. பெற்றோர் தமது பிள்ளை சமயக்கல்வியில் பங்கெடுப்பதா என்பதைத் தீர்மானிப்பர். அவர்களது மதம் எந்த சமய வகுப்புக்குப் போவது என்பதைத் தீர்மானிக்கும். 16 வது பிறந்த நாளுக்குப் பின், இளைஞர் தாம் சமய வகுப்பில் பங்கேற்பதா என்பதைத் தாமாகவே முடிவு செய்யலாம்.

## 7. பெற்றோருக்கான மேலதிக தகவல்கள்

| | |
|---|---|
| **இணையப்பக்கங்கள்** | டொய்ச் மொழியில் பெற்றோருக்கான தகவல்கள்<br>*www.volksschulbildung.lu.ch/schulsystem*<br><br>பெற்றோருக்காக மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்கள், தொகுப்பு<br>*www.volksschulbildung.lu.ch/uebersetzungen_eltern* |
| **பெற்றோர் தொடர்பு கொண்டு பேசக் கூடிய நபர்கள்** | வகுப்பாசிரியர்களும் பாடசாலைத் தலைமைப்பீடமும் பெற்றோர் தொடர்பு கொண்டு பேசக் கூடிய நபர்களாவர். |
| **FABIA** | வெளிநாட்டவர்களுக்கான ஆலோசனைக்கும் ஒன்றிணைவுக்குமான துறைசார் நிறுவனமான FABIA, ஒரு பக்கசார்பற்ற துறைசார் நிறுவனமாகும். அது வெளிநாட்டுப் பெற்றோரின் கேள்விகளின் போதும், பிரச்சினைகளின் போதும், முரண்பாடுகளின் போதும் இலவசமாக தனது சேவையை வழங்குகின்றது.<br>*www.fabialuzern.ch* |

KANTON LUZERN

கல்வி கலாச்சார திணைக்களம்
**அரசினர் பாடசாலைச் சேவைகள் பணியகம்**
கெல்லர் வீதி 10
6002 லுட்சேர்ண்

Bildungs- und Kulturdepartement
**Dienststelle Volksschulbildung**
Kellerstrasse 10
6002 Luzern

www.volksschulbildung.lu.ch
2018-156/151626

ஆகஸ்ட் 2013